# 07 விளையாடுவோம், சமூகத்திற்கு இசைவாகுவோம்



பொதுவாக மனிதர்கள் ஒன்றுபட்டு வாழவே விரும்புகின்றனர். மனிதர்கள் இவ்வாறு ஒன்றுபட்டு வாழும்போது ''சமூகம்'' உருவாகிறது. ஒன்றுபட்ட இந்த சமூக வாழ்வில் பாட்டி, பாட்டன், அப்பா, அம்மா, பிள்ளைகள், சகோதர சகோதரிகள் போன்றோரைக் கொண்ட சிறிய அலகே எமது குடும்ப அமைப்பாகும். அதேபோன்று பாடசாலையும் ஒரு முக்கிய சமூக அலகாகும்.

*''மனிதன் சமூகத்திற்கு ஏற்ப வாழ்க்கை நடத்தவேண்டும் என சமூக விஞ்ஞானியான எமில் பேர்க் தெரிவித்துள்ளார்.*

அதாவது, தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் தனித்தனி சுதந்திரம் இருந்தாலும், சமூகத்தில் வாழும்போது சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டதிட்டங்கள் (விதிமுறைகள்), பழக்கவழக்கங்கள், ஒழுக்க விழுமியங்கள், கட்டுக்கோப்புகள் போன்றவற்றுடன் இசைந்து செல்ல வேண்டும்.

இவ்வாறு குடும்பம், பாடசாலை மற்றும் சமூக அமைப்புகள் எதிர்பார்க்கும் கலாசார விழுமியங்கள் போன்றவற்றைக் கடைப்பிடித்து வாழும் ஒருவனை

சமூகமயமானவன் (Socialized) அல்லது சமூகத்திற்கு இசைந்து நடப்பவன் என அறிமுகப்படுத்தலாம்.

**செயற்பாடு 7.1**

நீங்கள் சமூகத்தில் ஒரு அங்கத்தவன் என்ற வகையில் குடும்பத்தில் மற்றும் பாடசாலையில் பின்பற்றப்படும் பழக்கவழக்கங்கள், நடைமுறைகள், சட்ட ஒழுங்குகள் ஆகியன அடங்கிய பட்டியலொன்றை உங்கள் பயிற்சிப் புத்தகங்களில் எழுதுங்கள்.

நீங்கள் தயார்ப்படுத்தியுள்ள பட்டியலில் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை அவதானியுங்கள்.

## வீட்டில் பின்பற்றப்படும் சில பழக்கவழக்கங்கள்

- பெற்றோர்கள் - பெரியோர்களுக்குக் கீழ்ப்படிதல்.
- அவர்களுக்கு மதிப்பளித்தல்.
- குடும்ப உறுப்பினர்களுடன் ஒற்றுமையாக வாழுதல்.
- பெற்றோருக்கும் முதியோர்களுக்கும் உதவியாக இருத்தல்.
- ஏனையவர்களின் கருத்துகளுக்கும் எண்ணங்களுக்கும் மதிப்பளித்தல்.
- வீட்டிற்கு வரும் விருந்தினர்களை உபசரித்தல்
- நட்பாக இருத்தல்.
- முதியோர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றல்
- குடும்பத்திலுள்ளவர்களின் சுக நலன்களில் கவனம் எடுத்தல்.
- ஏனைய மதங்களை மதித்தல்.



உரு 7.1
பெற்றோர்களை வணங்கிப் பாடசாலை செல்லும் மாணவன்

## பாடசாலையில் பின்பற்றப்படும் சில பழக்கவழக்கங்கள்

- பாடசாலைக்குக் குறித்த நேரத்திற்கு சமூகமளித்தலும் வெளியேறுதலும்.
- பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களுக்குக் கட்டுப்படுதல்.
- பாடசாலையில் அனைவருக்கும் மதிப்பளித்தல்.
- பாடசாலை ஒழுக்கம், விதிமுறைகள் என்பவற்றிற்கு அமைய நன்னடத்தையுடன் செயற்படல்.
- வகுப்பறையில் உரிய வேலைகளில் ஈடுபடல்.
- கல்வி நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ளல்.
- பாடசாலையின் பௌதிக வளங்களைப் பாதுகாத்தல்.

- சீருடைகளை ஒழுங்கான முறையில் அணிந்து பாடசாலைப் பாரம்பரியத்தைப் பேணல்.
- ஏனையோரின் கருத்துகளுக்கு மதிப்பளித்தல்.
- பாடப்புத்தகங்களையும் ஏனைய சொத்துக்களையும் நல்ல முறையில் பயன்படுத்தல்.
- பாட வெளிக்களச் செயற்பாட்டில் ஈடுபடல்.
- வெற்றி தோல்விகளைச் சமமாக மதித்தல்.
- குழு உணர்வுடன் செயற்படல்.



உரு 7.2
ஆசிரியருக்கு வகுப்பறையில் வணக்கம் செலுத்தும் மாணவர்கள்

*மேற்குறிப்பிட்டுள்ள சிறந்த பழக்கவழக்கங்களை நீங்கள் பின்பற்றுபவராயின் நீங்கள் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவராவீர்கள். அவ்வாறெனின் நீங்கள் சமூகத்திற்கு இசைவான சமூகமயமாக்கப்பட்டவராகத் திகழ்வீர்கள்.*

*நாமும் சமூகம் எதிர்பார்க்கும் பழக்கவழக்கங்களுக்கும் விழுமியங் களுக்கும் மதிப்பளித்து சமூகத்திற்கு இசைவான ஒருவராவதற்கு உறுதி (திடசங்கற்பம்) கொள்வோம்.*

சமூகப்பற்றுள்ள ஒருவராகத் திகழ்வதற்கு வாழ்க்கையில் நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அதிகமாகும். அவற்றுள் பாடசாலையில் நடைபெறும் மைதான விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடும்போது கிடைக்கும் அனுபவங்கள் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

## 7.1. விளையாட்டுச் சட்ட திட்டங்களுக்கும் ஒழுக்க விழுமியங்களுக்குமிடையிலான தொடர்பு

தற்போது விளையாட்டுகள் பலதரப்பட்ட மட்டங்களில் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

- தினமும் உடற்பயிற்சிகளில் ஈடுபடும்போது பங்குகொள்ளும் சிறு விளையாட்டுகள், வழி விளை யாட்டுகள்.
- வகுப்புகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள்.



உரு 7.3 ஒற்றுமையாக விளையாட்டில் பங்குகொள்ளல்

- பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள்.
- பாடசாலைகளுக்கிடையிலான சிநேகபூர்வப் போட்டிகள்.
- கோட்ட மட்டப் போட்டிகள்
- வலய மட்ட / மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள்.
- தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள்.
- சர்வதேசமட்ட விளையாட்டுப் போட்டிகள்.

பாடசாலை மாணவர்களாகிய நீங்கள், மேற்குறித்த செயற்பாடுகளில் பங்கேற்று, உங்களுடைய திறன்களைப் பயன்படுத்தி, விளையாட்டுச் சட்ட திட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் ஏற்பச் செயற்பட்டு அனுபவங்களைப் பெற்றுக்கொண்டதுடன் வெற்றிகளையும் பெற்றிருப்பீர்கள்.

எந்த வகையான விளையாட்டானாலும், அதற்கு அங்கீகரிக்கப்பட்ட பொது விதிமுறைகள் உள்ளன. அதேபோன்று அங்கீகரிக்கப்பட்ட சட்ட திட்டங்களும் உள்ளன. அதாவது, ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுகள், பங்கு கொள்ளும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை, விளையாட்டு மைதான அளவு, விளையாட்டு நேரம், போட்டியின் இடைவேளை நேரம் என்பவற்றைக் கொண்டவை.

பொதுவாக நூல்களில் குறிப்பிடப்படாத விளையாட்டுகளுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரங்கள் உள்ளன. இவையே அவ்விளையாட்டுகளுக்கான விதிமுறைகள் (Regulations) ஆகும். உதாரணமாகக் குழுநிலைப் போட்டிகள் முடிவடைந்ததன் பின்னர், வெற்றியடைந்த அல்லது தோல்வியுற்ற குழுவிலுள்ள வீர, வீராங்கனைகளுக்கிடையில் அல்லது வீரர்கள் நடுவர்களுக்கிடையில் ஏற்படக்கூடிய நட்புறவுகள்.

இவ்வாறு விளையாட்டுச், சட்ட திட்டங்களுக்குட்பட்டு விளையாட்டில் ஈடுபடல், பண்பாட்டைப் பாதுகாத்தல், சமூக ஏற்பு மற்றும் அங்கீகாரங்களுக்கு மதிப்பளித்தல் ஆகியவற்றின் மூலம் நீங்களும் ஒரு சமூகப்பற்றாளர் ஆகலாம். எனவே, விளையாட்டின் சட்டதிட்டங்கள் மற்றும் கலாசாரக் கட்டுக்கோப்புகள் ஆகியவற்றுக் கிடையில் எப்போதும் தொடர்புகள் இருந்தே வருகின்றன.



உரு 7.4 நடுவர் உட்பட வீரர்கள் நாணயச் சுழற்சியில் ஈடுபடுகின்றனர்.


*விளையாட்டு விதிமுறைகள், பழக்கவழக்கங்கள், மரபுகள் என்பவற்றுக்கு இடையே நிரந்தரமான தொடர்பு காணப்படுகிறது.*

## 7.2 விளையாட்டுச் சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுக்க விழுமியங்களின் முக்கியத்துவம்

விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபாடுடையவர்களின் குறிக்கோள்கள் பலவாகும். அது தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் இடம்பெறும் நடத்தை மாற்றத்திற்கமைய மாறுபடும்.

இதற்கேற்ப,

- எல்லாச் சமூகங்களும் மகிழ்ச்சிச்சியாகக் காலத்தைச் செலவழிக்க முடியும்.
- தாம் வாழும் சமூகத்தில் வேடிக்கையாகக் காலத்தைச் செலவழிக்க முடியும்.
- திருப்தியாக நாளாந்த வேலைகளில் ஈடுபடமுடியும்.
- குழு இசைவாக்கத்துடன் தொழிற்படுவதால் மனத் திருப்தியை அடைந்துகொள்ள முடியும்.



உரு 7.5 கடற்கரையில் கைப்பந்து விளையாட்டில் ஈடுபட்டுள்ளோர்

- ஓய்வைப் பயனுள்ளதாக்கிக்கொள்ள முடியும்.
- உடல், உள ஆரோக்கியத்தையும் சமூக ஒழுக்க விழுமியங்களையும் மேம்படுத்திக்கொள்ள முடியும்.
- முன்னேற்றகரமான நிலைக்கு விளையாட்டு வீரர்களை வழிப்படுத்த முடியும்.
- ஒற்றுமையுடன் செயற்பட முடியும்.
- சமூகத்திற்கு ஏற்ற, சிந்தனையுடன் கூடிய நற்பிரசைகளை உருவாக்க முடியும்.
- சமூகப்பற்றுள்ளோரை உருவாக்கிக் கொடுக்க முடியும்.

விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம், உங்களிடம் மேற்குறிப்பிட்ட அம்சங்களில் அபிவிருத்தியும் வளர்ச்சியும் ஏற்படும். இதனால், எக்கலாசார சமூகத்தினருடனும் சுமூகமான தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு விளையாட்டுகள் பங்களிப்புச் செய்கின்றன என்பதை அறிந்துகொள்ளலாம்.

*விளையாட்டின் சட்ட திட்டங்கள், ஒழுக்க விழுமியங்கள் என்பன மூலம் சமூகத்தின் பெறுமதியை அறிந்துகொள்ள முடியும்.*

## 7.3 விளையாட்டு வீரனிடம் காணப்படும் சமூகப் பண்புகள்

உங்கள் பாடசாலையில் பல தரப்பட்ட விளையாட்டுச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபட்டு வருவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். பெரும்பாலான மாணவர்கள் விளையாட்டுகளில் அதிகம் விருப்பமானவர்கள். சமூகத்தை ஒழுங்கமைப்பதற்குத் தேவையான திறன்களையும் குழுவாக இயங்கும் அனுபவங்களையும் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம், வகுப்பறையைப் போன்று விட, விளையாட்டு மைதானத்திலும் கிடைக்கின்றது.

விளையாட்டில் ஈடுபடும் நீங்கள் விசேடமானவர்கள். பாடசாலைக் காலங்களில் விளையாட்டில் ஈடுபடும் வீர, வீராங்கனைகள் தாம் கற்ற கல்விக்கு மேலதிகமாகத் தமது வாழ்க்கைக்குத் தேவையான பலவித அனுபவங்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள். இதன் மூலம் சமூகம் எதிர்பார்க்கும் மனிதன் உருவாகின்றான்.


எதிர்காலத்தில் தொழிலில் ஈடுபட வேண்டிய நீங்கள்,

- ஒழுங்குபடுத்தலில் திறமை
- வினைத்திறன்
- சிநேக மனப்பான்மை
- தீர்மானம் எடுத்தல்
- பிரச்சினைகளைத் தீர்த்தல்
- ஆளிடைத் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல்
- தலைமைத்துவமும் குழுவுணர்வும்

போன்ற விசேடமான சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளவர்களாகத் திகழ்வீர்கள்.

அவ்வாறாயின் உங்களுக்கு விளையாட்டுச் செயற்பாடுகள் மூலம் கிடைக்கும் அனுபவங்கள் மிகமிக முக்கியமானவையாகும்.

அரச, மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்கமைக்கும் சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்கும். அப்போது, நீங்களும் விளையாட்டு வீரனுக்குள்ள சமூகப்பண்புகளைக் காட்டிக்கொள்ளும் ஒருவராவீர்கள். பலதரப்பட்ட கருப்பொருள்களின் (Themes) கீழ் இவற்றை வகைப்படுத்த முடியும்.




## 7.3.1 குழு வீரர்களுடன் செயற்படும்போது பின்பற்ற வேண்டிய பண்புகள்

கூட்டுணர்வுடன் வெற்றியை நோக்கி முன்செல்வதற்கு ஒரு விளையாட்டு வீரன் எப்போதும் தனது குழு வீரர்களுடன் நட்புறவாகச் செயற்படுதல் வேண்டும். அதன் மூலம்,

- ஒருவருக்கொருவர் நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ளுதல்.
- தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுதல்.
- ஏனையோரின் திறமைகளைப் பாராட்டுதல்.
- தமது திறமைகளை வெளிக்காட்டி பாராட்டுக்குட்படுதல்.
- குறைந்த தேர்ச்சியுள்ளவர்களையும் ஊக்குவித்தல்.
- விமர்சனத்திலிருந்து விடுபடல்.
- தொடர்ச்சியாகப் பயிற்சிகளில் ஈடுபடல்.



உரு 7.6 வெற்றியடைந்த வீரருக்குப் பாராட்டுத் தெரிவித்தல்

- பிரச்சினைகளுக்கு உள்ளாகாதிருத்தல்.
- தனது குழுவினர் பொருத்தமற்ற முறையில் நடந்துகொள்ள வழிசெய்யாதிருத்தல்.
- தனிப்பட்ட முறையில் உடற்றகைமைகளை வளர்த்துக்கொள்ளல்.
- பயிற்றுவிப்பாளருக்குக் கீழ்ப்படிதல், கௌரவமளித்தல்.

## 7.3.2 எதிரணி வீரர்களுடன் செயற்படும்போது பின்பற்ற வேண்டிய பண்புகள்

தானும் தனது குழுவினரும் போட்டியிடுவது, தன்னைப் போன்ற வீரர்களுடனேயே தவிர, எதிரிகளுடனல்ல என்பதை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அதே போன்று கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களுக்கேற்ப அவர்களுடன் செயற்படுதல் வேண்டும்.



உரு 7.7 போட்டி முடிவுற்றதும் வீரர்கள் கைலாகுகொடுத்து விடைபெறுதல்

- பொருத்தமற்ற, தகாத வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்த்தல்.
- எதிரணிவீரருக்கு, தனது வீரர் ஒருவரால் ஏற்படுத்தப்படும் அநீதியான செயற்பாட்டுக்கு இடமளிக்காதிருத்தல்.
- எதிரணி வீரர்களின் விசேட திறமைகளை ஊக்குவித்துப் பாராட்டுதல்.
- வெற்றிபெற்ற வேளை தேவையற்ற கோஷங்களைக் கூறாதிருத்தல்.
- தோல்வியுற்ற வேளை சுய கருத்துகள் கூறுவதைத் தவிர்த்துக் கொள்ளல்.
- வெற்றி - தோல்வி ஏற்படும் சந்தர்ப்பங்களில் எதிரணியினருடன் சிநேகபூர்வமாக உரையாடல், விடைபெறுதல்.

## 7.3.3 அலுவலர்களுடன் செயற்படும்போது பின்பற்ற வேண்டிய பண்புகள்

- நடுவர் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளல்.
- நடுவரின் தீர்ப்புச் சம்பந்தமாகக் கடினமான கேள்வி கேட்பதைத் தவிர்த்துக் கொள்ளுதல்.
- நடுவர்களுக்கு மதிப்பளித்தல்.
- அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
- அலுவலர்களுக்கு நன்றி தெரிவித்தல்.
- நடுவரின் தீர்ப்பில் தவறுதலாகப் பிழை ஏற்பட்டால் அச்சந்தர்ப்பங்களில்,
  - ♦ கேலி செய்வதைத் தவிர்த்தல்
  - ♦ அவமதிப்புச் செய்தலைத் தவிர்த்தல்
  - ♦ விவாதம் புரிதலைத் தவிர்த்தல்



உரு உரு 7.8 நடுவரின் தீர்ப்பிற்குக் கட்டுப்படுதல்

இருப்பினும் இச்சந்தர்ப்பங்களில் உங்கள் குழுத் தலைவருக்கூடாக முறையான எதிர்ப்பை முன்வைக்க முடியும்.

### 7.3.4 நீங்கள் பார்வையாளராகக் கலந்துகொள்ளும் வேளையில் பின்பற்ற வேண்டிய பண்புகள்

- திறமைகளை இரசித்தல்.
- வீரர்களுக்கு இடையூறை ஏற்படுத்தாதிருத்தல்.
- கேலி செய்யாதிருத்தல்.
- ஏனையோரின் சுய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்தாதிருத்தல்.
- எல்லாக் குழுக்களினதும் திறமைகளைச் சமமாக மதிப்பதுடன், அவர்களைப் பாராட்டுதல்.
- பக்கச் சார்பற்ற முறையில் விளையாட்டைப் பார்வையிடுதல், உற்சாகமூட்டல்.
- நடுவர்களின் தீர்ப்பிற்கு இடையூறு விளைவிக்காதிருத்தல், விமர்சனங்கள் பரிமாறுவதைத் தவிர்த்தல்.
- சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக நிர்வாகத்தினர் மூலம் உரிய நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத் தெரிந்து வைத்திருத்தல்.



உரு 7.9 மகிழ்ச்சியுடன் விளையாட்டைப் பார்வையிடுவோர்

மேற்குறிப்பிட்ட பண்புகளையுடையவராக நீங்கள் இருப்பின், நீங்கள் விளையாட்டையும் கட்டுகோப்புள்ள சமூகத்தையும் வளம்படுத்தக்கூடிய ஒருவராவீர்கள்.

*ஆகவே, இவ்வாறான பண்புகளைப் பின்பற்றுவதன் மூலம் சமூகப் பற்றுள்ள மனிதனாக உயர்வடைய முயற்சியுங்கள்.*

## 7.4 விளையாட்டுச் சட்டதிட்டங்கள், ஒழுக்க விழுமியங்கள் தொடர்பாக விளையாட்டு நிர்வாகத்தின் நடிபங்கு

ஒவ்வொரு விளையாட்டுக்கும் சட்டதிட்டங்களை உருவாக்குவதும் காலத்திற்குக் காலம் ஏற்படும் மாற்றங்களை மேற்கொள்வதும் விளையாட்டு நிர்வாகத்தின் முக்கிய பங்காகும்.

**உதாரணம்** : இலங்கையில் மெய்வல்லுனர் விளையாட்டுகள் தொடர்பான சட்டதிட்டங்களை இலங்கை அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கம் உருவாக்கி வருகின்றது (SLAAA). இது சர்வதேச அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கத்தின் ஊடாக நடைபெறுகின்றது (IAAA).

இதற்கமைய அந்தந்த விளையாட்டினது சட்டதிட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு இலங்கைக் கரப்பந்தாட்டச் சங்கம், இலங்கை உதைபந்தாட்டச் சங்கம் போன்ற அமைப்புகள் தேவையான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. கல்வி அமைச்சின் விளையாட்டுப் பிரிவும், விளையாட்டு அமைச்சும் ஒன்றிணைந்து இதற்கு உறுதுணையாகச் செயற்படுவது முக்கியமான அம்சமாகும்.

இவ்வமைப்புகளின் குறிக்கோள், நோக்கம் விளையாட்டினது சட்ட திட்டங்களைப் பாதுகாப்பதாகும். அத்துடன், ஒழுக்கமான, ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய வீரர்களை உருவாக்குவதுமாகும். ஆகவே, இவ்வாறான விளையாட்டு வீரர்கள் உருவாகுவதனால் நாட்டிற்குத் தேவையான, கீழ்ப்படிவுள்ள பிரஜைகள், சமூகப்பற்றாளர்கள் போன்றவர்களும் உருவாகுவார்கள். இதனால், நாடு, வளர்ச்சியும் அபிவிருத்தியும் அடையும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

விளையாட்டின் மூலம் சட்ட ஒழுங்கை மதிப்பவர்கள், நல்லொழுக்க முள்ளவர்களாகவும் பண்பாட்டாளர்களாகவும் கௌரவமானவர்களாகவும் விளங்குவார்கள். நாமும் அவ்வாறான பண்புள்ளவர்களாக ஆவதற்கு முயற்சியை மேற்கொள்வோம்.

**செயற்பாடு 7.2**

சுருக்க எழுத்துகளால் தெரியப்படுத்தப்பட்டுள்ள, ஒவ்வொரு விளையாட்டிற்குமான தகவல்கள் சிலவற்றைச் சேகரியுங்கள்.
**உதாரணம்** : உலக விளையாட்டுகளின் ஒழுங்கமைப்பு சம்பந்தமாக தகவல்களைச் சேகரியுங்கள். உதாரணமாக: ஐ.ஸீ.ஸீ (I.C.C).

**ஒப்படை 7.1**

உங்களது அனுபவத்தைக் கொண்டு நீங்கள் பங்குபற்றிய அல்லது பார்த்த சில விளையாட்டுகளில் கடைப்பிடிக்கப்படும் கலாசார விழுமியங்கள், பழக்கவழக்கங்கள் உள்ளடங்கிய கையேடு ஒன்றைத் தயாரியுங்கள்.

**உதாரணம்** : உதைப்பாந்தாட்டப் போட்டியில் எதிர்த்தரப்பு வீரரொருவர் கீழே விழுந்து விட்டால், அவர் எழுந்திருப்பதற்கு உதவிபுரிதல்.